# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

***************

## ஊடக அறிக்கை

## வடக்கு கிழக்கு மாகாணங்களின் அரசியல் தலைவர்களுடன் உயர் ஸ்தானிகரின் சந்திப்புக்கள்

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான விஜயத்தின் மூன்றாம் நாளான 13 மார்ச் 2021 அன்று யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் உள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களுடன் உயர் ஸ்தானிகர் கௌரவ கோபால் பாக்லே அவர்கள் ஒரு தொடர் சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தார்.

இந்த சந்திப்புகளில் முதலாவதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ குலசிங்கம் திலீபனுடனான சந்திப்பில் 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பாக இந்தியாவின் உறுதியான நிலைப்பாட்டுக்கு அவர் நன்றியினை தெரிவித்ததுடன் வன்னி தேர்தல் மாவட்டத்தில் மேலதிக இந்திய உதவி திட்டங்களுக்கும் கோரிக்கை விடுத்திருந்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அவர்கள் தலைமையிலான தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் (TELO), கௌரவ தர்மலிங்கம் (PLOTE), கௌரவ எம் ஏ சுமந்திரன், கௌரவ எஸ். ஸ்ரீதரன், கௌரவ சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் வடமாகாண சபையின் இளம் அரசியல் தலைவர்கள் மாகாண மக்களின் அபிவிருத்திக்கான தேவைகள் தொடர்பாக உயர்ஸ்தானிகருக்கு விளக்கமளித்தனர். நீர், சுகாதாரம், கல்வி, ஆளுமை விருத்தி, ஆரோக்கியம், விவசாயம், தொடர்புகள் மற்றும் மீன்பிடி உள்ளிட்ட துறைகளில் மிகவும் ஆழமான ஈடுபாட்டினை கொண்டிருக்க வேண்டிய பல்வேறு நடைமுறை சாத்தியமான செயற்பாடுகள் குறித்தும் இங்கே கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் கௌரவ சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தலைமையில் திரு சுரேஷ் பிரேமச்சந்திரன் (EPRLF), திரு.என்.ஸ்ரீகாந்தா, திரு எம்.கே.சிவாஜிலிங்கம் (தமிழ் தேசிய கட்சி), திருமதி அனந்தி சசிதரன், திரு வேந்தன், திரு கதிர் (ஜனநாயகப் போராளிகள் கட்சி) மற்றும் திரு ஐங்கரநேசன் (பசுமை தாயகம்) ஆகிய 8 பேர் அடங்கிய தமிழ் கட்சிகள் தற்போது காணப்படும் பொருளாதார மற்றும் அரசியல் முன்னுரிமை தொடர்பாக உயர் ஸ்தானிகர் அவர்களுக்கு விளக்கமளித்தனர். இந்நிலையில் கழிவு முகாமைத்துவம் மற்றும் ஆளுமை அபிவிருத்தி தொடர்பாக முன் வைக்கப்பட்டிருந்த ஒத்துழைப்புக்கான பரிந்துரைகள் குறித்து உயர் ஸ்தானிகர் பாராட்டுக்களை தெரிவித்தார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் வடக்கு கிழக்கில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முன்னுரிமைக்குரிய விடயங்கள் தொடர்பாக குறிப்பிட்டிருந்தனர்.

கிழக்கு மாகாணத்தின் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் தலைவர்களான கௌரவ சாணக்கியன் எம்பி மற்றும் திருகோணமலை மாவட்ட தலைவரான திரு குகதாசன் ஆகியோருடன் உயர் ஸ்தானிகர் சந்திப்பினை மேற்கொண்டிருந்தார். உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆளுமை விருத்தி, நீர் மற்றும் நீர்ப்பாசனம், பெண்கள் ஊக்குவிப்பு மற்றும் சக்தி துறைசார் முதலீடுகள், தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் சாத்தியமான செயற்பாடுகள் குறித்து உயர் ஸ்தானிகருக்கு, பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக இந்தியாவின் தொடர்ச்சியான ஈடுபாட்டிற்கு உயர் ஸ்தானிகர் இந்தச் சந்திப்பில் உறுதி அளித்திருந்தார்.

இந்த சகல சந்திப்புகளிலும் தமிழ் தலைவர்கள், மாகாணத்தில் இந்திய நன்கொடையின் கீழான அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் அடிப்படையில் மேலதிக பொருளாதாரம் ,முதலீடு மற்றும் மேலதிக உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள் ஆகியவற்றுக்கான உதவியினை தமிழ் தலைவர்கள் கோரியுள்ளனர். இந்தியா இந்த விடயங்களில் தனது தொடர்ச்சியான ஒத்துழைப்பினை வழங்குமென உயர் ஸ்தானிகர் உறுதியளித்திருந்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலும் மக்களாலும் முன்வைக்கப்படும் தேவைகளுக்கு அமைவாக மாகாணங்களின் அபிவிருத்திக்காக இந்தியா நீண்டகாலமாக ஒத்துழைப்பினை வழங்குவதனை அவர் சுட்டிக்காட்டினார்.

கௌரவம், சமாதானம், நீதி மற்றும் சமத்துவம் ஆகியவற்றுக்கான தமிழ் சமூகத்தின் நியாயபூர்வமான அபிலாசைகள் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் ஈடுபாடு தொடர்பில் நினைவூட்டியிருந்த அவர், ஓர் ஐக்கிய இலங்கைக்குள் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வு ஒன்றின் ஊடாக அவற்றினை உறுதிப்படுத்துவது நாட்டின் சமாதானம் நல்லிணக்கம் வினைத்திறன் மிக்க முன்னேற்றம் மற்றும் ஐக்கியம் ஆகியவற்றிற்கு பங்களிப்பு வழங்குமெனவும் குறிப்பிட்டார்.

**************

கொழும்பு
14 மார்ச் 2021